# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): மார்ச் 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **மே 10, 2019**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மார்ச் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டது. மார்ச் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 5.7% இனால் அதிகரித்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 மார்ச் மற்றும் 2018 மார்ச் மாதங்களில் முறையே 116.5 மற்றும் 110.3 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

2018 மார்ச் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதத்திற்கான 'தோல் மற்றும் தோல் உற்பத்திகள்', 'மின் உபகரண உற்பத்திகள்' மற்றும் 'இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள்' என்பனவற்றில் முறையே 18.1%, 10.5% மற்றும் 8.0% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. மேலதிகமாக, உணவு உற்பத்திக் கைத்தொழில் 2018 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதம் 0.2% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| மார்ச் - 2019 | 116.5 |
| மார்ச் - 2018 | 110.3 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 5.7 | |
| | |
| 1ம் காலாண்டு 2019 - 109.9 | |

மேலும், உற்பத்திக் கைத்தொழில்களில்: 'ஏனைய உற்பத்திகள்' (மோட்டார் வாகன உற்பத்தி, ஏனைய போக்குவரத்து சாதனங்கள், 'பார ஊர்திகள்' மற்றும் 'ஆபரணங்கள்' என்பன அடங்கும்), 'கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்' மற்றும் 'மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்', என்பன முறையே 49.1%, 20.7% மற்றும் 17.7% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

உற்பத்திக் கைத்தொழில்களில் 2018ஆம் ஆண்டு முதலாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் **2019ஆம் ஆண்டு முதலாம் காலாண்டு** உற்பத்திகள் 2.2%ஆல் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2019 ஆம் ஆண்டின் மார்ச் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.